# திருவெறும்பூரில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தேர்தல் பரப்புரை தொடக்கம்!

## தலைவர்கள் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை!



திருச்சி, மார்ச் 31-2026 தமிழக சட்டமன்றத் தேர்தலில், திருவெறும்பூர் தொகுதி வேட்பாளராக திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்களால் மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளார் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி.

வேட்பாளர் அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து, தனது சொந்தத் தொகுதியான திருவெறும்பூரில் அமைச்சர் அன்பில் மகேஸ் உற்சாகமாகத் தனது தேர்தல் பணிகளைத் தொடங்கினார். அதன் ஒரு பகுதியாக, தொகுதியின் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள முக்கியத் தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அமைச்சர் அன்பில் மகேஸ் அவர்கள் பின்வரும் இடங்களில் மரியாதை வழங்கினார்:

பி.ஹெச்.எல் (BHEL) வளாகம்: அங்குள்ள அண்ணா சிலை, அம்பேத்கர் சிலை மற்றும் காமராஜர் சிலைகளுக்கு மாலை அணிவித்தார்.

காட்டூர்: தந்தை பெரியார் சிலைக்குப் பெருந்திரளான தொண்டர்களுடன் வந்து மரியாதை செலுத்தினார்.

ஆயில் மில் செக் போஸ்ட்: இப்பகுதியில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கினார்.

கலைஞர் அறிவாலயம்: அறிவாலய வளாகத்தில் அமைந்துள்ள தனது தாத்தாவும், கழக முன்னோடியுமான ஐயா அன்பிலார் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து ஆசி பெற்றார்.

இந்த நிகழ்வின் போது மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேகரன் பகுதி கழகச் செயலாளர்கள் நீலமேகம் தர்மராஜ் விஜயக்குமார் சிவக்குமார் ஒன்றிய கழகச் செயலாளர்கள் கருணாநிதி கங்காதரன் துவாக்குடி நகரக் கழக செயலாளர் காயம்பு பேரூர் கழகச் செயலாளர் தங்கவேலு மற்றும் கழக நிர்வாகிகள், தொ.மு.ச. நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

திருவெறும்பூர் தொகுதிக்கு ரூபாய் 450 கோடிக்கு மேலான வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதா தி.மு.க. வேட்பாளரா அன்பில் மகேஸ் பொய்யாமொழி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறினார்.

திருவெறும்பூர் தொகுதியின் மூன்றாவது முறையாக என்னை போட்டியிடுவதற்கு அனுமதி வழங்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக முதல்வர் ஆசியுடன் தற்போது கிளம்பி உள்ளேன். இந்த ஐந்து ஆண்டு காலத்தில் தமிழக முதல்வர் நாட்டு மக்களுக்கு செய்துள்ள பல்வேறு நல திட்டங்களை தோழமைக் கட்சிமட்டும் பாராட்டவில்லை நமது எதிரியாக நினைக்கக்கூடிய கட்சிகளும் கொள்கை எதிராக நினைக்கக் கூடிய கட்சிகளும் பாராட்டுகிறது

அந்த பலம் ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் பிரதிபலிக்கும்.

வரும் மே மாதம் 4ம் தேதி திராவிட மாடல் 2.0ஆட்சி பதவியேற்கும் என்ற நம்பிக்கை எங்கள் அனைவருக்கும் உள்ளது.

முதல் வாக்காளர்கள் யாராக இருந்தாலும் எந்த கட்சி என்ன செய்துள்ளது என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள் நாங்கள் சொல்வதைக் கூட நம்ப வேண்டாம் இன்று இருக்கும் டெக்னாலஜி மூலம் அதனை நீங்களே பார்த்துக் கொள்ளலாம்

**அரசு என்ன செய்துள்ளது என்று தெரியும்**

ஏன் திராவிட மாடல் என்று சொல்கிறோம் ஏன் பாராட்டுகிறோம் அவர்கள் என்ன செய்துள்ளார்கள் என்பதை நான் சொல்வதைக் காட்டிலும் டெக்னாலஜியை பார்த்து தெரிந்து கொள்ளுங்கள் சட்டமன்ற உறுப்பினராக ஒரு கிராமத்திற்கு என்ன தேவை ஒரு சீரணி அரங்கம், குடிநீர் டேங், பள்ளி கட்டிடம், சமுதாயக் கூடம், ஸ்மார்ட் கிளாஸ் ரூம், மக்களின் நீண்ட நாள் பிரச்சினைகளாக இருக்கக் கூடிய வீட்டு மனை பட்டா தமிழர்களின் வீர விளையாட்டாக உள்ள ஜல்லிக்கட்டு விழாவிற்கு தமிழ்நாட்டில் இரண்டாவது ஆக சூரியூரில் அரசு சார்பில் ஜல்லிக்கட்டை விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ளது

இது அரசு நமது தொகுதியில் கட்டி கொடுத்துள்ளது நமக்கு பெருமை நமது தொகுதியில் மாடல் பள்ளியை துவாக்குடி பகுதியில் கட்டியது அது நமக்கு பெருமை

ரேஷன் கடையை கட்டிக் கொடுப்பதாக இருந்தாலும் சாலைகளை அமைத்துக் கொடுப்பதாக இருந்தாலும் குடிநீர் வசதி செய்து கொடுப்பதாக இருந்தாலும் ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்து ரூ450 கோடிக்கு மேலான வளர்ச்சி திட்ட பணிகளை மேற்கொள்ளப் பட்டுள்ளது

புதிதாக கட்டப்பட்ட காமராஜர் அறிவுசார் மையம் நூலகம் திருச்சி மாவட்டத்தின் இன்னொரு அடையாளமாக தற்பொழுது உள்ளது

நான் சார்ந்துள்ள மாவட்டத்திற்கு செய்ய வேண்டும் என்ற ஆசை இருக்க வேண்டும் அந்த ஆசை மட்டும் போதாது அதற்கு உரிய செயல் இருக்க வேண்டும் செயல் மட்டும் போதாது அதற்குரிய நிதியை பெற வேண்டும் அதற்கான தமிழக முதலமைச்சரின் பார்வை திருச்சி மாவட்டத்தில் தொடர்ந்து இருப்பதால் தான் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மேற்கொள்ளமுடிந்தது

திருவெறும்பூர் தொகுதியில் மட்டும் 17 ஆயிரம் குடும்பத்திற்கு வீட்டு மனை பட்டா பெற்றுக் கொடுத்துள்ளோம்.

தேர்தல் என்பது இன்னொரு நாள் மக்களுக்கான பணி தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது.

தாய் வீடாக இருக்கும் திருவெறும்பூரில் உள்ள ஒவ்வொரு சகோதரசகோதரிகளை சந்தித்து வாக்கு கேட்பேன்.

நாங்கள் தற்போது செய்துள்ளது கூறியும் குறிப்பாக ஒலிம்பிக் அகாடமி கொண்டு வந்துள்ளோம் இது விளையாட்டு துறையை சார்ந்துள்ளது ஒரு தொகுதியில் எல்லாமே இருக்கிறது என்ற அளவிற்கு அந்த தொகுதியை மாற்ற வேண்டும் அது எனது ஆசை.

ரேஷன் கடை சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொண்டு உள்ளோம் அவற்றை அனைத்தையும் நாங்கள் செய்து முடித்து விட்டதாக கூற முடியாது 10 ல் 7 செய்திருப்போம் மீதமுள்ள அதை செய்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது எங்களுக்கு தெரியும் அதனை தொடர்ந்து செய்ய வேண்டும் என்றார்.




நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகமான கலைஞர் அறிவாலயம் பேராசிரியர் கூட்டரங்கில், வேட்பாளர்கள் அறிமுக கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என் இராஜேஸ்குமார் கலந்து கொண்டு ராசிபுரம் தொகுதியில் போட்டியிடும் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் தொகுதியில் போட்டியிடும் ப.ராணி, சேந்தமங்கலம் தொகுதியில் போட்டியிடும் பூமலர் பொன்னுசாமி ஆகியோரை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் சி. மணிமாறன், தொகுதி பொறுப்பாளர்கள் நன்னியூர் ராஜேந்திரன், முனவர் ஜான், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்..

# தோல்வி பயத்தால்தான் விஜய் இரண்டு இடங்களில் போட்டியிடுகிறார்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை. மார்ச். 31-

புதுக்கோட்டையில் உள்ள தி.மு.க. அலுவலகத்திற்கு திருமயம் தொகுதி வேட்பாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி, ஆலங்குடி தொகுதி வேட்பாளர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வேட்பாளர் டாக்டர் வை.முத்துராஜா ஆகியோர் வருகை தந்தனர், அங்கிருந்த கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் எஸ்.ரகுபதி,

அறுபது புதுமுகங்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தில் இந்த முறை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. முதியோர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு தலைவர் தளபதி அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் சேர்ந்து வெற்றி வேட்பாளர் பட்டியலை தயாரித்துள்ளனர்.

164 தொகுதிகளும் வெற்றி பெறக்கூடிய தொகுதிகள். தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த 11 பேர் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட உள்ள நிலையில் மொத்தம் 175, எனவே எங்களுடைய இலக்கு 200 என்பதை தாண்டி வெற்றி பெறக்கூடிய வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது.

**வாக்குறுதிகளை நிறைவேற்றும் ஒரே கட்சி தி.மு.க.!**

விஜய்க்கு எந்தத் தொகுதியில் ஜெயிப்போம் என்பதே தெரியவில்லை. அதனால் தோற்றுவிட்டால் என்ன செய்வது என்பதற்காக இரண்டு தொகுதியில் போட்டியிடுகிறார். அந்த இரண்டு தொகுதியிலும் தோல்வியடைவார். புதுக்கோட்டையில் 6 க்கு 6 தொகுதிகளை அள்ளிச் செல்வோம். தேர்தல் வாக்குறுதிகள் கொடுத்தால் நிறைவேற்றுகிற ஒரே கட்சி தி.மு.க. கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை யார் வேண்டுமென்றாலும் தரலாம், நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளையும் தரலாம், நாங்கள் நிறைவேற்றக்கூடிய சாத்தியமான வாக்குகளை மட்டுமே தான் தலைவர் தளபதி அறிவிப்பார், எப்பாடுபட்டும் நிறைவேற்றுவார்.

தவெக_வை ஒரு கட்சியாகவே நாங்கள் எடுத்துக் கொள்ளவில்லை. திமுக அண்ணா திமுக இடையே தான் போட்டி. கண்ணாடி போல் உடைந்த கூட்டணி என்று சொல்கிறவர்களுக்கு அவர்களே பார்த்து ஆச்சரியப்படும்படி அந்த கண்ணாடிகள் எல்லாம் அருமையாக இருக்கின்றன. அதிலே முகத்தைப் பார்த்துக் கொள்ளலாம் தெளிவாக தெரியும். தமிழ்நாட்டில் பாஜகவின் கட்டமைப்பு பலவீனமாக இருப்பதாக அமித்ஷா கூறி இருப்பது குறித்த கேள்விக்கு, அவர் உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார் என தெரிவித்தார். அதிமுக வேட்பாளர் பட்டியல் 2021ல் வெளியிடப்பட்டதன் ஜெராக்ஸ் தான்,

பாஜக தொகுதிகள் தேடிப் பிடித்து தான் போடப்பட்டுள்ளது, அதிலிருந்து அதன் கட்டமைப்பு தெளிவாக தெரியும். புதுக்கோட்டை என்றைக்குமே காவிக் கோட்டையாக மாறாது, உதயசூரியன் என்ற கோட்டையாக தான் மாறும் என்றார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட முனைவர்.பி.பழனியப்பனுக்கு பழைய தருமபுரி,கடத்தூர்,பொம்மிடி உள்ளிட்ட பகுதிகளில் கழகத்தினர்,கூட்டணிக் கட்சியினர்,பெண்கள் உள்ளிட்ட பொதுமக்கள் திரளாக வந்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### திருவாரூரில் தலைவரை வரவேற்க

# தொ.மு.ச. தோழர்கள் கருப்பு - சிவப்பு சீருடையுடன் அலைகடலென அணி திரள்வீர்!

## நாகை மண்டலப் பொதுச் செயலாளர் சு.பாண்டியன் அழைப்பு!

திருவாரூர்,மார்ச்31.

மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குகூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம்செய்து தேர்தல் பரப்புரை மேற்கொள்ள திருவாரூர் வரும் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களை வரவேற்க அரசு போக்குவரத்து தொ.மு.ச தோழர்களுக்கு அழைப்பு விடுத்து கும்பகோணம் மற்றும் நாகை மண்டல பொதுச்செயலாளர் சு.பாண்டியன் அறிக்கை விடுத்துள்ளார். தமது அறிக்கையில் அவர் கூறியுள்ளதாவது,

அன்பிற்குரிய தலைமைச் சங்க நிர்வாகிகள், கிளைச் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களே . மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மகத்தான வெற்றியை முரசொலிக்க அன்புத் தளபதி பாசத்தலைவர் எந்நாளும் நம் நாட்டு முதல்வர் ஆரூருக்கு வருகிறார்!

புலிக்கொடியேந்தி மனுநீதி சோழனும், சிபிச்சக்ரவர்த்தியும் தேரோட்டிய திருவாரூர்! தமிழ்க் கொடியேந்தி ஆதிக்க இந்தி எதிர்த்துகுவளைப் பேராளர் நடைபோட்ட திருவாரூர்! ஆழித்தேர் அசைந்தாடி நடந்த திருவாரூர்! ஐந்தாண்டு திராவிட மாடல் ஆட்சியில் இமாலய சாதனைகள்! எல்லா துறைகளிலும் முதன்மை மாநிலம் தமிழ்நாடு! தமிழ்மொழி, இனம், நிலம், பண்பாடு, கலாச்சாரம் காத்து நிற்கும் தலைவர், தந்தைபெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் தலைவர் கலைஞரும் ஒன்றான உருவமாக வருகிறார் பாசத்தலைவர் முத்துவேல் கருணாநிதிஸ்டாலின்!

31.03.2026 செவ்வாய்க் கிழமை மாலை திருவாரூரில் தலைவரை வரவேற்க கருப்பு சிவப்பு சீருடையுடன் அலைகடலென அணிதிரள்வீர். இவ்வாறு கும்பகோணம் மற்றும் நாகை மண்டல பொதுச்செயலாளர் சு.பாண்டியன் அறிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூரில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் பர்கூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் மதியழகன் பர்கூரில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து தனது பிரச்சாரத்தை தொடங்கினார். அப்போது பேசுகையில் தமிழ்நாட்டில் இதுவரை எந்த அரசும் செய்யாத மக்கள் நலத் திட்டங்கள் ‘திராவிட மாடல்’ அரசு ஏராளமான திட்டங்களை செய்துள்ளதை எடுத்துக் கூறி பர்கூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் தனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு வாக்காளர்களை கேட்டுக் கொண்டார். பிரச்சாரத்தின் போது மாவட்ட அவை தலைவர் நாகராஜ் , பொருளாளர் கதிரவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் உடன் இருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் குத்தாலம் ஒன்றியம் வழுவூரில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து தனது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார். உடன் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி. என்.விஜயபாலன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம் ஸ்ரீதர், இலக்கிய அணி மாநில துணை செயலாளர் வை.சௌமியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, முத்து. மகேந்திரன், மாவட்ட கழகத் துணை செயலாளர் எஸ்.செல்வமணி, கண்ணகி கண்ணீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றிய கழக செயலாளர்கள் மங்கை எம். சங்கர், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல் மாலிக், அமிர்த விஜயகுமார், கு.வைத்தியநாதன் ஏ.ஆர். ராஜா,மயிலாடுதுறை நகர கழக செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ் மற்றும் பலர் உள்ளனர்.